செ.வெ.எண்: 596/2016 நாள்: 02.09.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2016-ம் ஆண்டு நடைபெறவுள்ள சாதாரண உள்ளாட்சித் தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள வாக்குச்சாவடிகள் குறித்த விவரங்களை வெளியிடுவது மற்றும் பிரசுரம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் காலக்கெடு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | விவரம் | காலக்கெடு |
|---|---|---|
| 1. | வரைவு வாக்குச்சாவடி பட்டியல்கள் தயாரித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறுதல் | 07.09.2016-க்குள் |
| 2. | அ) வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களை உரியவாறு விளம்பரப்படுத்துதல்<br>ஆ) நகர்புற உள்ளாட்சிகளுக்கான வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களை உள்ளாட்சி மன்றத்தில் வைத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உள்ளூர் பிரதிநிதிகளை கலந்தாலோசித்தல்<br>இ) ஊரக உள்ளாட்சிகளுக்கான வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களை அங்கீகிரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உள்ளூர் பிரதிநிதிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்தாலோசிப்பதற்கான கூட்டத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் நடத்துதல்<br>ஈ) ஆட்சேபணைகள் கருத்துருக்கள் இருப்பின் பரிசீலித்து இறுதி செய்து, பட்டியல்களுக்கு உரிய திருத்தங்கள் (தேவைப்படின்) மேற்கொள்ளல் | 08.09.2016-க்குள்<br>12.09.2016-க்குள் |
| 3. | வாக்குச்சாவடி இறுதிப்பட்டியல்களை வெளியிடுதல் மற்றும் பிரசுரம் செய்தல் | 14.09.2016-க்குள் |
| 4. | வாக்குச்ாவடி பட்டியல்களை அச்சிட்டு முடித்தல் மற்றும் விநியோகித்தல் | 15.09.2016-க்குள் |

மேற்குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் வரைவு வாக்குச்சாவடிப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல், நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் மன்றத்தில் வைத்தல், ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோரித்தலுக்கான கூட்டத்தினை நடத்துதல் மற்றும் வாக்குச்சாவடி இறுதி பட்டியல் வெளியிட்டு பிரசுரப்படுத்துதல் ஆகிய பணிகளை முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒம்/-சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மைநகல்/உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (தேர்தல்),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.